# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2025

பதிவு எண் | | | | | | |

## ஒன்பதாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

பகுதி - I 15×1=15

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:

1) தமிழ் விடு தூது ______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

3) நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

4) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

5) தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

6) ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே.
- இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

7) பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

8) 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' - யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?
அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்.
ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்.
இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்.
ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்.

9) இந்திய தேசிய இராணுவம் ______ இன் தலைமையில் ______ உருவாக்கினர்.
அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

10) முண்டி மோதும் துணிவே இன்பம் - இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது
அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

11) தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை
அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்
இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை எழுதுக:

பூவாது காய்க்கும் மரம்உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ________
அ) சிறுபஞ்சமூலம் ஆ) புறநானூறு இ) தமிழ்விடுதூது ஈ) பெரியபுராணம்

13) இப்பாடலின் ஆசிரியர் ________
அ) சேக்கிழார் ஆ) காரியாசான் இ) பாரதிதாசன் ஈ) சீத்தலைச்சாத்தனார்

14) தாவா - இலக்கணக்குறிப்பு எழுதுக.
அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்
இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற்பெயர்

15) இப்பாடலில் இடம்பெற்ற எதுகைச் சொற்கள்
அ) மூவாது - மூத்தவர் ஆ) பூவாது - மூவாது
இ) விதையாமை - உரையாமை ஈ) அறிவார் - வல்லார்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 4×2=8
(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

16) விடைகளுக்கேற்ற வினா அமைக்க:
அ) தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்.
ஆ) 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டுவரப்பட்டது.

17) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

18) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.

19) கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

20) 'பகுத்தறிவு' என்றால் என்ன?

21) 'அன்புநாண்' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 5×2=10

22) மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:
அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.
ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது.

23) கலைச்சொல் தருக:
அ) Water Management ஆ) Sugarcane Juice

24) ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக: (கால், அகல்)
அ) எண்ணெய் ஊற்றி ________ விளக்கு ஏற்றியவுடன்,
இடத்தை விட்டு ________
ஆ) எனக்கு ________ பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்;
பார்த்து உன் ________ ஐ வை.

25) பொருள் தருக:
அ) யாக்கை ஆ) முந்நீர்

26) சொற்றொடர் உருவாக்குக:
அ) பசுமரத்தாணி போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

27) வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.

28) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 2×3=6

29) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

30) உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும். நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர். திருந்திய மக்களை மற்ற உயிர்களினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்குச் சிறந்த வழியாகும்.

அ) மக்களை மற்ற உயிர்களினின்றும் பிரித்துக் காட்டுவது எது?

ஆ) எதனால் பண்டைத் தமிழ் மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்?

இ) மொழி எதனை அள்ந்தறிவதற்குச் சிறந்த வழியாக உள்ளது?

31) அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 2×3=6

(வினா எண் 34-க்கு கட்டாயம் விடையளிக்கவும்)

32) பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணைய வழிச் சேவைகளை எழுதுக.

33) ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

34) அடிபிறழாமல் எழுதுக:

'ஆக்குவது ஏதெனில்' - எனத் தொடங்கும் யசோதர காவிய பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)

'ஒன்றறி வதுவே' - எனத் தொடங்கும் தொல்காப்பியரின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க: 2×3=6

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல் - இக்குறட்பாவினை அலகிட்டு எழுதுக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 5×5=25

38) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ் விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. (அல்லது)

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

39) அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக. (அல்லது)

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40) அ) நயங்களைப் பாராட்டி எழுதுக:


வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே!

\- வாணிதாசன்.

*(அல்லது)*

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

41) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:



42) மொழிபெயர்க்க:

அ) Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval

ஆ) Sunset is still my favourite colour, and rainbow is second - Mattie Stepanek

இ) A nation's culture resides in the hearts and in the soul of its people. - Mahatma Gandhi

ஈ) The biggest problem is the lack of love and charity - Mother Teresa

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க: 3×8=24**

43) அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

*(அல்லது)*

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

45) அ) உங்கள் நண்பன் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால்முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

\-----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner